திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிறுவனம் எவ்வளவு மூலதனத்தில் தொடங்க இருக்கிறது? ஒரு ஆண்டுக்கு எவ்வளவு டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுமார் இருபது லட்சம் ரூபாய். சுமார் 10,000 டெலிவிஷன் செட்டுகள்.

Plantations in Tamil Nadu.

* 616 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of plantations and the extent of land therein under foreign control and foreign collaboration ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 23 தேயிலைத் தோட்டங்கள், 2 காப்பித் தோட்டங்கள், 3 ஏலத் தோட்டங்கள், 1 இரப்பர் தோட்டம். இவைகளின் மொத்தப் பரப்பு 9,518.28 ஹெக்டேர்கள்.

மாயூரத்திலுள்ள சிறுதொழில் பிரிவு

* 617 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள தொழிற்சாலையில் தற்போது எந்தெந்தக் கருவிகள் செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (1) கிடங்குகள், சர்க்கரை ஆலைகள், பள்ளிக்கட்டிடங்கள் முதலியவைகளுக்கான உருக்குக் கட்டுமானங்கள்.

(2) உருக்கு மற்றும் மரத்தாலான நீர்ப்பாசன மதகுக் கதவுகள்—திருகு மற்றும் நீள்தண்டு வகை.

(3) உருக்காலான மேல்நிலை நீர்த்தொட்டிகள்.

(4) உருக்கு புகைப் போக்கிகள், கம்பி வேலைப்பாடுகள் மற்றும் நுழைவாயில்கள்.

(5) மேற்கண்டவைகளுக்குச் செப்பனிடும் பணிகளையும் பழுதுபார்க்கும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளல்.